மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது கொடுத்துவந்த முறையில் மாறுதலை நிவர்த்திக்கும் முறையில்தான் அதைத் திருப்பித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்கள்.

*595.—வினா. திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஞ்சாயத்து ஒன்றியங்களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வர வாய்ப்பளிக்கும் அரசு ஆணை எண். 1219, 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் தேதியின் உத்திரவினை நகராட்சி ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த 12, 19-ந் தேதி ஆணை என்பது — ஒரு நான்கு நாட்களுக்கு முன்புதான் நான் அறிந்தேன் — அதை ரத்து செய்துவிட்டு 130 எண். கொண்ட ஒரு ஆணை புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று. இதனால் ஒரே குழப்பமாக இருக்கிறது. முதல் ஆணை, 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட்'டிலிருந்து எய்டட் ஸ்கூலிலிருந்து பஞ்சாயத்து யூனியனுக்கு அப்சார்ப்ஷன் செய்யும் பொழுது சீனியாரிட்டி என்று சொல்லிவிட்டு, இரண்டாவது ஆணையில் 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட் இன் பஞ்சாயத்து யூனியன்' என்று வந்து, பிறகு 130 எண். கொண்ட ஆணை வந்திருக்கிறது. தயவு செய்து இந்த 130 ஆம் எண் ஆணையை கேன்சல் செய்து விட்டு, எய்டட் ஸ்கூலாக இருந்தாலும் ஒரே சீனியாரிட்டி என்று கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சிலர் இது தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அங்கு கிடைத்த தீர்ப்பையொட்டித்தான் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் கொடுத்த ரிட்மனு மீது இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அப்படித் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கும்பொழுது ஆணை பிறப்பிக்கலாமா என்று சட்டத்துறையோடு ஆலோசனை நடைபெற்று வருகிறது.

1978 மார்ச் 16]

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழும் நகராட்சிகளின் கீழும் பணியாற்றும் செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு, ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திற்கு மாற்றம் தேவைப்படும் நேரத்தில் அவர்களுடைய தகுதி குறையாமல், சர்விஸ் குறையாமல் மாற்றம் செய்ய வழிவகை உண்டா ? உண்டெனில் இதற்கு முன் யாரேனும் விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மாநகராட்சி அளவிலே உள்ள நிலைமைகளைக் கேட்கிறார்கள். அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் தான் விவரம் கூற முடியும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலேயும், நகராட்சிப் பள்ளிகளிலேயும் ஆசிரியர் வேலைக்கு நியமிக்கப்படும்பொழுது எந்த விதியின்கீழ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டு விவரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோவை நகராட்சியிலுள்ள தினக்கூலித் தொழிலாளர்கள்.

*596 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபையின் கீழ் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்கு பொதுப்பணித்துறையின் கீழ் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்குள்ள ஊதிய விகிதம் மற்ற சலுகைகள் கொடுக்கப்படாமலிருப்பது அரசு கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் உள்ளது.